# மெட்ரோ ரயிலில் தினமும் 1 லட்சம் பேர் பயணம்

சென்னை, ஜூலை11-

மெட்ரோ ரயிலில் சராசரியாக தினமும் 1 லட்சம் பேர் பயணம் செய்து வருகிறார்கள்.

சென்னையில் மெட்ரோ ரயில் முதல் கட்டமாக 45 கிலோ மீட்டர் தூரத்துக்கு அமைக்கப்பட்டு பயணிகள் சேவை நடந்து வருகிறது.

தற்போது வண்ணாரப் பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை மெட்ரோ ரயில் இயக்கப் பட்டு வருகிறது. 2-வது கட்டமாக மாதவரம்- சிறுசேரி வரை மெட்ரோ ரயில் பாதை அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.

மெட்ரோ ரயிலில் பயணம் செய்வோர் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. மெட்ரோ ரயிலில் சராசரியாக தினமும் 1 லட்சம் பேர் பயணம் செய்து வருகிறார்கள்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

மெட்ரோ ரயில் பயணத்தை தினமும் அலுவலகம் செல்வோர் பெரிதும் விரும்புகிறார்கள். தனியார் நிறுவன ஊழியர்கள், ஐ.டி. நிறுவன ஊழியர்கள் என பல ஆயிரம் பேர் தினமும் பயணம் செய்து வருகிறார்கள்.

விமான பயணிகள் மற்றும் விமான நிலையத்துக்கு செல்வோருக்கு மெட்ரோ ரயில் பெரிதும் உதவிகரமாக உள்ளது. விமான நிலையத்துக்கு தினமும் 9 ஆயிரம் பேர் மெட்ரோ ரயில் மூலம் வந்து செல்கிறார்கள். சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்துக்கு தினமும் 8,500 பேர் வந்து செல்கிறார்கள். திருமங்கலம் ரயில் நிலையத்துக்கு 7500 பேர் தினமும் வந்து செல்கிறார்கள்.

வாரவேலைநாட்களில் தினமும் அனைத்து ரயில் நிலையங்களிலும் சராசரியாக 95 ஆயிரம் பேர் பயணம் செய்கிறார்கள். சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 60 ஆயிரம் பேர் சராசரியாக பயணம் செய்து வருகிறார்கள். ஜூன் மாதம் இறுதியில் சராசரியாக 1 லட்சம் பேர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்து உள்ளனர்.